# அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.– பி21/ 78 IV

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய, 23(2) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

எம். ஏ. முனிதாச,
பதில் செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1996 செத்தெம்பர், 13.

### கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1990, சனவரி 5 ஆம் தேதிய, 591/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைத் திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டம் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :–

(அ) அதன் 4 ஆம் பந்தியின் (ஔ) என்னும் வாசகத்தை இல்லாதொழித்து அதற்குப் பதிலாகப் பின்வரும் வாசகத்தை இடுவதன் மூலம் :–

"(ஔ) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய கற்கைக்கிளையில் அல்லது கற்கைக் கிளைகளில் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கான நிதிகளையும் வேறு வசதிகளையும் ஒதுக்குதல்" ;

(ஆ) 7 ஆம் பந்தியின் 1 ஆம் உப பந்திக்குக் பதிலாக பின்வரும் புதிய உப பந்தியை இடுவதன் மூலம் :

"(1) (அ) திறந்த பல்கலைக்கழகமொன்றின் உப வேந்தர், (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அப்பல்கலைக்கழகத்தின் பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட ஒரு குழாத்திலிருந்து ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் மூன்றாண்டுக் காலப் பகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆளெவரும், அதே பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக அடுத்தடுத்துவரும் இரு காலப்பகுதிகளுக்கு மேலாக நியமிக்கப்படுதலாகாது.

(இ) திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்."

(இ) அதன் 13 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (vii) ஆம் வாசகத்தில் "ஒலிபரப்பு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "தொடர்புச்சாதனம்" என்னும் சொல்லை இடுவதன் மூலம்;

(ஈ) அதன் 14 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியில் –

(i) "ஏராம் உட்பந்தியினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏராமுட்பந்தியினால்" என்னும் சொல்லை இடுவதன் மூலம்;

(ii) அவ்வுட்பந்தியின் (xiv) அத்துடன் (xv) என்னும் வாசகங்களில் "கற்கைப் பிரிவுகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கற்கைப் பகுதிகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(iii) அவ்வுட்பந்தியின் (xvi), (xvii) ஆகிய வாசகங்களுக்காகப் பின்வரும் புதிய வாசகங்களை இடுவதன் மூலம் :–

"(xvi) (அ) திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்குக் கல்வித் தொழில்நுட்பவியலைத் திட்டமிடுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான போதனை விடயப் பொருட்களின் ஆக்கத்துக்கும் கல்வித் தொழினுட்பவியல் சபையொன்றை நியமித்தல். அத்தகைய சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் துணைவிதியால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கல்வித் தொழில்நுட்பவியல் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(i) துணை வேந்தர் ;
(ii) கல்வித் தொழிநுட்பவியல் பணிப்பாளர் ;
(iii) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர் ;
(iv) பிரதேச கல்விச் சேவைகள் பணிப்பாளர் ;
(v) நூலகப் பொறுப்பாளர் ;
(vi) கல்வித் திணைக்களத் தலைவர் ;
(vii) கல்வி தொழில்நுட்பவியல் திணைக்களத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர், II ஆந் தர ஆசிரியர்கள் அத்துடன் அதற்கு மேற்பட்ட தர ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ;
(viii) மூதவையின் உறுப்பினர்களிடையே அதனால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;
(ix) ஒவ்வொரு துறைச் சபையின் உறுப்பினர்களிடையே, அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரொருவர்.

(இ) கல்வித் தொழில் நுட்பவியல் சபையின் செயலாளர் துணைவேந்தரின் விதப்புரையின் மீது பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) மேலே (ஆ) உள்வாசகத்தின் உள்வாசகம் (ix) இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர், சிரேட்ட விரிவுரையாளர் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஒரு ஈராண்டு காலத்திற்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(xvii) (அ) பிரதேசக் கல்விச் சேவைகளைத் திட்டமிடுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும், கற்கை நடைமுறைக்குத் தேவைப்படும் மூலவளங்களுக்கான ஏற்பாடு செய்வதற்கும், பிரதேசக் கல்விச் சேவைகள் சபையொன்றை நியமித்தல்.